Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 077 | செவ்வாய்க்கிழமை Tuesday | 16.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# "கீர்த்தி சக்ரா" விருது பெற்ற தமிழக ராணுவ வீரர் குடும்பத்தினருடன் முதலமைச்சர் விஜய் சந்திப்பு



தமிழ்நாடு முதல்-அமைச்சர் ச.ஜோசப் விஜய் இன்று தலைமைச் செயலகத்தில், இந்திய அரசின் "கீர்த்தி சக்ரா" விருது பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த ராணுவ வீரர் லான்ஸ் நாயக் அ. மீனாட்சி சுந்தரத்துக்கு பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் வெளிப்படுத்திய அசாத்திய வீரதீரச்செயலைப் பாராட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 48 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

இந்திய ராணுவத்தின் பீரங்கிப் படைப்பிரிவில் பணியாற்றிவரும் தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த லான்ஸ் நாயக் அ.மீனாட்சி சுந்தரம் டிசம்பர் 19, 2024 அன்று ஜம்மு காஷ்மீர் மாநிலத்திலுள்ள குல்காம் பகுதியில் நடைபெற்ற பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையின்போது. பயங்கரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டில் முகம் மற்றும் தோள்பட்டையில் பலத்த காயம் அடைந்த நிலையிலும், தனது கடமையிலிருந்து தவறாமல் தொடர்ந்து போராடி, பயங்கரவாதிகளை வீழ்த்தினார்.


அவரது அசாத்திய வீர தீரச் செயலைப் பாராட்டி இந்தியாவின் இரண்டாவது உயரிய அமைதிக்கால வீர விருதான கீர்த்தி சக்ரா விருதினை ஜனாதிபதி திரவுபதி முர்மு கடந்த 8-ம் தேதி புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் வழங்கிச் சிறப்பித்தார். தேசத்தின் பாதுகாப்பிற்காகத் தனது இன்னுயிரையும் பொருட்படுத்தாமல் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட இந்திய ராணுவ வீரர் லான்ஸ் நாயக் அ.மீனாட்சி சுந்தரத்தின் நாட்டுப்பற்று, துணிச்சல், கடமை உணர்வு தமிழ் மண்ணிற்குப் பெருமைசேர்ப்பதோடு, இளம் தலைமுறையினரிடையே வீர உணர்வு மற்றும் தியாக மனப்பான்மையை வளர்த்திடும் வகையில் அமைந்துள்ளது.

பல்வேறு வீர தீரச் செயல்களுக்காக தமிழ்நாட்டைச் சேர்ந்த பாதுகாப்புப் படை வீரர்கள் விருதுகளைப் பெறுகின்றபோது, அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசு அவர்கள் பெற்ற விருதுகளுக்கேற்ப ரொக்கப் பரிசு வழங்கிச் சிறப்பித்து வருகிறது. அவ்வகையில், உயரிய விருதான "கீர்த்தி சக்ரா" விருது பெற்ற ராணுவ வீரர் லான்ஸ் நாயக் அ. மீனாட்சி சுந்தரத்துக்கு, தமிழ்நாடு முதல்-அமைச்சர் விஜய் தமிழ்நாடு அரசின் சார்பில் 48 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி, தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த சந்திப்பின்போது ராணுவ வீரரின் குழந்தையை முதல்-அமைச்சர் விஜய் தூக்கி தனது மடியில் வைத்து கொஞ்சினார்.

## அமெரிக்கா ஈரான் இடையே தற்காலிக போர் நிறுத்தம்

# ஹார்முஸ் நீரிணையை கடக்கும் கப்பல்கள் நீங்கும் எரிபொருள் தட்டுப்பாடு



அமெரிக்கா,இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது நடத்திய தாக்குதலால் மத்திய கிழக்கில் கடந்த சில மாதங்களாக பதற்றமான சூழ்நிலை நிலவியது. இந்த தாக்குதலில் முக்கிய அரசியல் தலைவர்கள்,இரு தரப்பு வீரர்கள், அப்பாவி பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவுடனான மோதலை தொடர்ந்து ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. இதனால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலைஉயர்ந்தது.அதேவேளை, ஈரானின் துறைமுகங்களை அமெரிக்க கடற்படை முடக்கியது. இதனால் ஈரானுக்கு சரக்கு, கச்சா எண்ணெய் கப்பல்கள் செல்வது பாதிக்கப்பட்டது.

**அமைதி ஒப்பந்தம்**

பல்வேறு நாடுகளின் கூட்டு முயற்சியால் அமெரிக்கா - ஈரான் இடையே தற்காலிக போர் நிறுத்தம் அமல்படுத்தப்பட்டது. பின்னர், இரு நாடுகளுக்கு இடையே அமைதி பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. இந்நிலையில், பேச்சுவார்த்தையில் அமைதி ஒப்பந்தம் எட்டப்பட்டதாக அமெரிக்கா, ஈரான் அறிவித்துள்ளது. இதன் மூலம் கடந்த சில மாதங்களாக அமெரிக்கா, ஈரான் இடையே நிலவி வந்த மோதல் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஹார்முஸ் நீரிணை திறப்பு – டிரம்ப்**

மேலும் அனைத்து நாடுகளின் கப்பல்களுக்கு ஹார்முஸ் நீரிணை சுங்கக்கட்டணம் இன்றி திறக்கப்படும் என்று ஈரானும், ஈரானின் துறைமுகங்களை முற்றுகையிட்டுள்ள அமெரிக்க படைகள் உடனடியாக திரும்பபெறப்படும் என்றும் அமெரிக்காவும் அறிவித்துள்ளன. அமைதி ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளதால், ஹார்முஸ் நீரிணை கட்டணமின்றி திறக்கப்படும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் சமூக வலைதளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"ஈரானுடனான ஒப்பந்தம் இப்போது நிறைவடைந்து விட்டது. அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஹார்முஸ் நீரிணையை கட்டணமின்றி திறக்க நான் இதன்மூலம் முழுமையாக அங்கீகரிக்கிறேன். அதே நேரத்தில், அமெரிக்க கடற்படை முற்றுகையை உடனடியாக நீக்கவும் அங்கீகரிக்கிறேன். உலகக் கப்பல்களே, ஹார்முஸ் நீரிணையை கடக்க தயாராகுங்கள். எண்ணெய் தடையின்றி பாயட்டும்!"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**ஒப்பந்தத்தை உறுதிப்படுத்திய ஈரான்**

அமெரிக்காவுடனான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதை ஈரானின் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் காசெம் கரிபாபாடி அரசுத் தொலைக்காட்சியில் பேசியபோது உறுதிப்படுத்தினார்.இந்த ஒப்பந்தம் இரு நாடுகளின் போருக்கு "உடனடி முற்றுப்புள்ளி" வைத்ததாகவும், "இறுதி உடன்படிக்கையை" எட்டுவதற்காக இரண்டு மாதங்களுக்குள் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் கூறினார்.

அமைதி ஒப்பந்தத்தின் கீழ், ஈரானின் முடக்கப்பட்ட சொத்துக்களில் முதற்கட்டமாக 12 பில்லியன் டாலரை அமெரிக்கா விடுவிக்க உள்ளதாக ஈரானிய அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.60 நாள் பேச்சுவார்த்தை காலத்திற்குள் மொத்தம் 24 பில்லியன் டாலர் சொத்துக்களை விடுவிக்க உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

**சரியும் கச்சா எண்ணெய் விலை**

அமெரிக்கா, ஈரான் இடையே இறுதியாகியுள்ள அமைதி ஒப்பந்தத்தால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை கிடுகிடுவென சரிந்து வருகிறது. அதிகாலை வர்த்தகத்தில்,ப்ரெண்ட் கச்சா எண்ணெய் விலை 4.03% சரிந்து ஒரு பேரல் 83.81 டாலராகவும், அமெரிக்காவின் WTI கச்சா எண்ணெய் விலை 4.70% சரிந்து 80.89 டாலராகவும் குறைந்துள்ளன.

**நீங்கும் எரிபொருள் தட்டுப்பாடு**

அமைதி ஒப்பந்தம் காரணமாக ஹார்முஸ் நீரிணை திறக்கப்பட்டதால், கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுக்களுடன் ஹார்முஸ் நீரிணை பகுதியில் காத்திருந்த கப்பல்கள் நீரிணையை கடந்து செல்கின்றன. இதன் மூலம் உலக நாடுகளுக்கு விரைவில் எரிபொருள் தட்டுப்பாடின்றி கிடைக்க வழிவகை ஏற்பட்டுள்ளது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# குமரியில் திடீர் கடல் சீற்றம்: வீடுகளுக்குள் புகுந்த கடல்நீர்



குமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.தொடர் மழை மற்றும் கடல் சீற்றம் காரணமாக கடலோர கிராமங்களான அழிக்கால் மற்றும் பிள்ளைத்தோப்பு ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் திடீரென கடல் நீர், மழை நீருடன் சேர்ந்து குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்தது. அதாவது கடல் நீரானது பொழிமுகம் வழியாக உள்ளே புகுந்து உள்ளது.

ஏற்கனவே பொழிமுகம் பகுதியில் கால்வாயில் மண் தூர்ந்து தண்ணீர் சீக்கிரமாக கடலில் கலப்பது தடைபட்டு வந்தது.

இந்த நிலையில் கடல் சீற்றம் காரணமாக கடல் நீர் கால்வாய் வழியாக ஊருக்குள் புகுந்தது. இதனால் மாதாநகர், வின்சன் நகர் பகுதிகளில் வெள்ளம் போல் கடல் நீர் சூழ்ந்ததால் அப்பகுதி மீனவர்கள் பெரும் பரிதவிப்பிற்கு ஆளானார்கள். சுமார் 100 வீடுகளுக்குள் புகுந்த தண்ணீரால் அங்கிருந்த அத்தியாவசிய பொருட்கள், வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் உணவு பொருட்கள் ஆகியவை சேதமடைந்தன.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# சோலூர் தூபக்கண்டியில் இலவச கண் சிகிச்சை முகாம்; 100க்கும் மேற்பட்டோர் பயன்

உதகை சோலூர் அருகே தூபகண்டி அங்கன்வாடி மையத்தில் நீலகிரி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், புளூமவுண்டன் நியர் விஷன் கலெக்டிவ் மற்றும் ஆல் திசில்ரன் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு சோலூர் பேரூராட்சி தன்னார்வலர் கோக்கால் சிவகுமார் தலைமை தாங்கினார். கோக்கால் அரசு உயர்நிலைப்பள்ளி குடிமக்கள் நுகர்வோர் மன்ற பொறுப்பு ஆசிரியர் ராஜா, ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் மற்றும் சமூக ஆர்வலர் ராஜ்குமார், சாந்தமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமை கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சு. சிவசுப்பிரமணியம், கோக்கால் ஊர் நாட்டாமை சிவகுமார் கண்ணன், தலைவர்கள் ரவி (தூபகண்டி), நீலி (கண்ணேரிமுக்கு) ஆகியோர் முகாமை தொடங்கி வைத்தனர்.

முகாமில் நீலகிரி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்தின் திட்ட மேலாளர் மருத்துவர் விஜயஸ்ரீ தலைமையில் கண் மருத்துவர் டாக்டர் திலீப் உள்ளிட்ட மருத்துவக் குழுவினர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு கண் பரிசோதனை செய்து, தேவையான மருத்துவ ஆலோசனைகளை வழங்கினர். மேலும் கண் தொழில்நுட்ப நிபுணர் பாக்கியலட்சுமி மற்றும் ஜப்னா குழுவினர் கிட்டப்பார்வை குறைபாடு உள்ளவர்களுக்கு இலவச கண் கண்ணாடிகளை வழங்கினர்.

இந்த முகாமில் 100-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர். பரிசோதனையின் போது 32 பேருக்கு கண்புரை (Cataract) பாதிப்பு, 5 பேருக்கு கண் நரம்பு தொடர்பான குறைபாடுகள், 70 பேருக்கு கிட்டப்பார்வை குறைபாடு மற்றும் 10 குழந்தைகளுக்கு பார்வை குறைபாடுகள் இருப்பது கண்டறியப்பட்டது.

இதில் கண்புரை பாதிப்பு உறுதி செய்யப்பட்ட 24 பேர் இலவச கண்புரை அறுவை சிகிச்சைக்காக உதகை  அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டது. மேலும் 65 பேருக்கு கிட்ட பார்வைக்கான இலவச கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. பிற நோயாளிகள் தேவையான மேல்சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டனர்.

முகாமிற்கான ஏற்பாடுகளை சோலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் ராகுல், செவிலியர்கள், கோக்கால் கிராம நிர்வாகிகள், கோக்கால் பள்ளி குடிமக்கள் நுகர்வோர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

தொடர்ந்து ஊர்மக்களின் ஒத்துழைப்போடு மக்களிடையே கண் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, பார்வை இழப்பை தடுக்கும் நோக்கில் இத்தகைய முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படும் என முடிவு செய்யப்பட்டது.



தென்காசி மாவட்டம் புளியறை போக்குவரத்து மற்றும் காவல் சோதனை சாவடியில் சுற்று சூழல் துறை அமைச்சர் மற்றும் தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் நள்ளிரவில் திடீர் ஆய்வு செய்தார்.




# தென்காசியில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழா

தென்காசி வட்டாட்சியர் அலுவலகம் அருகே அமைந்துள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகதிறப்புவிழா இன்று கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாநில இணை அமைப்பு செயலாளர் அன்பகம்கலைதலைமை வகித்தார். தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் வே. ஜெயபாலன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் கென்னடி தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் முன்னாள் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் சிவபத்மநாதன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லத்துரை ஆறுமுகச்சாமி தென்காசி மாவட்ட திமுக வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார் தலைமை பொதுக்குழு உறுப்பினர் செங்கோட்டை ரஹீம் ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம் ரமேஷ் சீனித்துரை ரவிசங்கர் கடையநல்லூர் நகர செயலாளர் அப்பாஸ் பொறுப்பாளர் இத்தாலியன் பீரப்பா தென் தாசி செங்கோட்டை நகர செயலர்கள் சாதிர் வழக்கறிஞர் வெங்கடேசன் பேரூர் செயலாளர்கள் முத்தையா, சங்கர் என்ற குட்டி பண்டாரம் ஆலங்குளம் யூனியன் சேர்மன் திவ்யா மணிகண்டன், அரசு ஒப்பந்ததாரர் மணிகண்டன் வழக்கறிஞர்கள் கார்த்திக், செந்தூர்பாண்டியன் வேலுச்சாமி காசி தர்மம் துரை, தென்காசி நகர் மன்ற துணைத் தலைவர் கே என் எல் சுப்பையா மேலகரம் பேரூராட்சி துணைத்தலைவர் ஜீவானந்தம் இலஞ்சி குமாரர் கோவில் அறங்காவலர் குழு தலைவர் பூவையா திமுக தென்காசி தெற்கு மாவட்ட அலுவலக மேலாளர் ராமராஜ் உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 19ம் தேதி நடக்கிறது

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்டத்தில் ஜுன் – 2026 ஆம் மாதத்திற்கான வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக இரண்டாம் தள கூட்ட அரங்கில் 19.06.2026 வெள்ளிக்கி ழமை காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது.

அன்றைய தினம் காலை 10.00 மணி முதல் 11.30 வரை மனுக்கள் பெறப்படும். 11.30 மணி முதல் 12.30 மணி வரை விவசாய சங்கப் பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்சினைகள் குறித்து தெரிவிக்கலாம். கருத்துக்கள் பிற்பகல் 12.30 முதல் 1.30 முடிய அலுவலர்களின் விளக்கங்களும் தெரிவிக்கப்படவுள்ளது.

இக்கூட்டத்தில் விவசாய பெருமக்கள் கலந்து கொண்டு பயன்பெற மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# கடையநல்லூரில் தவ்ஹீத் ஜமாத் சார்பில் பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக பிரம்மாண்ட கண்டன பேரணி!

சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக நடைபெறும் பாலியல் வன்கொடுமைகளைக் கண்டித்து, தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் (TNTJ) தென்காசி மாவட்டம், கடையநல்லூர் அனைத்து கிளைகள் சார்பில் பிரம்மாண்ட கண்டன பேரணி நடைபெற்றது. கடையநல்லூர் பேட்டை ஜலாலியா மண்டபம் அருகில் இருந்து தொடங்கிய இப்பேரணி, நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று மணிக்கூண்டு அருகில் நிறைவடைந்தது. இந்த கண்டன பேரணிக்கு தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் தென்காசி மாவட்டத் தலைவர் அப்துல் சலாம் தலைமை தாங்கினார். பேரணியில் திரளான பொதுமக்களும் அமைப்பின் தோழர்களும் கலந்துகொண்டு பெண்களுக்கு எதிரான கொடுமைகளுக்கு எதிராகப் முழக்கங்களை எழுப்பினர்.



தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தின் மாநில துணை பொதுச்செயலாளர் ஏ.கே. அப்துல் ரஹீம் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். அவர் தனது உரையில் நாட்டில் நடைபெறும் பாலியல் வன்கொடுமைகளில் பெரும்பான்மையான குற்றவாளிகள் அண்டை வீட்டாராகவோ அல்லது உறவினர்களாகவோதான் இருக்கிறார்கள் என்பதைப் புள்ளிவிவரங்களுடன் சுட்டிக்காட்டிய அவர், மக்களிடையே குற்றவாளிகளை அடையாளம் காணும் விழிப்புணர்வு உடனடியாக உருவாக வேண்டும் என வலியுறுத்தினார். தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நடைபெறும் பாலியல் வன்கொடுமைகளைத் தடுக்க அரசு கடுமையான சட்டப்பிரிவுகளை உருவாக்க வேண்டும். குற்றவாளிகளுக்குக் கடுமையான, முன்மாதிரியான தண்டனைகளை விரைந்து வழங்க வேண்டும். இத்தகைய குற்றங்களுக்கு எதிராக எவ்வளவு தடைகள் வந்தாலும், தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் தனது விழிப்புணர்வு பிரச்சாரங்களை மிகத் தீவிரமாகத் தொடர்ந்து முன்னெடுக்கும் எனவும் பெண்களிடையே ஒழுக்கமின்மையை விதைத்து, ஒட்டுமொத்த சமூகத்தையும் சீரழிக்கும் சினிமா கலாச்சாரத்தை முழுமையாக ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பெற்றோர்கள் தங்களது பெண் குழந்தைகளுக்கு 'தவறான தொடுதல்' (Bad Touch), 'நல்ல தொடுதல்' (Good Touch) என்பதைச் சொல்லிக் கொடுப்பதோடு நின்றுவிடாமல், "அந்நிய ஆண்கள் தொடுவதே தவறு" என்ற தற்காப்பு உணர்வையும் விழிப்புணர்வையும் சிறு வயது முதலே ஊட்ட வேண்டும்' எனவும் உரையாற்றினார்

இப்பேரணியில் மாவட்டச் செயலாளர் ஜலாலுதீன், பொருளாளர் அன்வர் சாதிக், துணைச் செயலாளர்கள் ஹாஜா மைதீன், செய்யதலி, பீர் மைதீன், அப்துல் பாசித், முஹம்மது அலி பிலால், மருத்துவ அணி நிர்வாகி அப்துல்லாஹ், மாணவரணி செயலாளர் ரபீக் ராஜா மற்றும் வர்த்தக அணி நிர்வாகி இனாமுல் ஹக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரணிக்கான ஏற்பாடுகளை கடையநல்லூர் அனைத்து கிளை நிர்வாகிகள் நிர்ஞ்சர் ஒலி, சேகனா, முஹம்மது பாரூக், செய்யது சுலைமான், பாதுஷா, சதாம், முஹம்மது இஸ்மாயில் ஆகியோருடன் இணைந்து, மாவட்ட தொண்டரணி செயலாளர் ஷேக் தாவூத் தலைமையிலான தொண்டரணியினர் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

# ஊட்டி மலை ரெயில் தனது முதல் பயணத்தை தொடங்கி 127 ஆண்டுகள் நிறைவு!



'மலைகளின் ராணி' என்று அழைக்கப்படும் ஊட்டிக்கு வரும் சுற்றுலாபயணிகளைகவர, ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலேயே, அதாவது 1899-ம் ஆண்டு இதே நாளில் (ஜூன் 15) மலை ரெயில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியாவின் மிகப்பழமையான மலை ரெயில்களில் ஒன்றான இது, சுவிட்சர்லாந்தின் அதிநவீனத் தொழில்நுட்பத்தைக் கொண்டு, செங்குத்தான மலைப்பாதையில் ரெயில்கள் வழுக்காமல் ஏறுவதற்கு 'ரேக் அண்டு பினியன்' தண்டவாள அமைப்போடு உருவாக்கப்பட்டது.

நிலக்கரி மூலம் நீராவி என்ஜின் கொண்டு இயக்கப்படும் ஊட்டி மலை ரெயில், தனது வரலாற்று சிறப்புமிக்க பயணத்தை தொடங்கி இன்றுடன் 127 ஆண்டுகள் நிறைவடைகிறது. காலங்கள் மாறினாலும், மலைப்பாதையில் இருபுறமும் தெரியும் கண்கொள்ளா காட்சிகளும், நீராவி ரெயில் என்ஜினும் இன்று வரை மாறவில்லை. ஆரம்பத்தில், மேட்டுப்பாளையம்-குன்னூர் இடையே இயக்கப்பட்ட இந்த மலை ரெயில், பின்னர் 1908-ம் ஆண்டு அக்டோபர் 15-ந் தேதியன்று குன்னூரையும் தாண்டி ஊட்டி வரை நீட்டிக்கப்பட்டது.

முன்னதாக, 1903-ம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தால் தேசியமயமாக்கப்பட்டு, அதன் பாரம்பரியத்தை போற்றும் வகையில், கடந்த 2005-ம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பால் உலகப் பாரம்பரிய தளமாக அங்கீகரிக்கப்பட்டது.

மேட்டுப்பாளையம் முதல் ஊட்டி வரையிலான 46 கிலோ மீட்டர் தூர ஊட்டி மலை ரெயில் பயணத்தில், அடர்ந்த காடுகள், எழில் கொஞ்சும் தேயிலைத் தோட்டங்கள், 208 சுற்றுகள், 16 கூர்மையான வளைவுகள், குகைகள் மற்றும் ஆழமான பள்ளத்தாக்குகள், அவற்றுக்குமேல் அமைந்துள்ள 250-க்கும் மேற்பட்ட பாலங்கள் என்று ரெயிலில் பயணிக்கும் சுற்றுலாபயணிகளை வெகுவாக கவர்ந்து இழுக்கிறது.

## வாராந்திர போதைப்பொருள் தடுப்பு கூட்டம்

# கல்லூரிகளின் போதைப்பொருள் தடுப்பு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கூரியர் நிறுவன உரிமையாளர்களுக்கான ஆய்வுக்கூட்டம் கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (15.06.2026) வாராந்திர போதைப்பொருள் தடுப்பு கூட்டம், கல்லூரிகளின் போதைப்பொருள் தடுப்பு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கொரியர் சேவை நிறுவன உரிமையாளர்களுக்கான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் கல்லூரி போதைப்பொருள் தடுப்பு ஒருங்கிணைப்பாளர்களுக்கு மாணவ, மாணவியர்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும், கல்லூரிகளில் அவ்வப்போது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். மேலும், கல்லூரி நிர்வாகங்கள் தங்களது பணியாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மூலம் மாணவர்கள் போதைப்பொருட்களை பயன்படுத்தாத வகையில் கண்காணித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். போதைப்பொருள் தடுப்பு அமைப்புகளின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலம் ஈரோடு மாவட்டத்தை போதைப்பொருட்கள் இல்லா மாவட்டமாக உருவாக்கி, மாநில அளவில் முன்னோடி மாவட்டமாக திகழச் செய்வதற்கு அனைவரும் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என தெரிவித்தார்.



இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி, உதவி ஆணையர் (கலால்) தியாகராஜன், கல்லூரிகளின் போதைப்பொருள் தடுப்பு ஒருங்கிணைப்பாளர்கள் (Anti-Drug Coordinators), கூரியர் நிறுவன உரிமையாளர்கள் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் செங்கப்பள்ளி தனியார் மருத்துவமனை சேனிடோரியம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மற்றும் பெருந்துறை சட்டமன்றத் தொகுதி நாம் தமிழர் கட்சி சார்பில் உலக இரத்ததான நாளையொட்டி ரத்ததான முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாமில் நாதக குருதிக்கொடை பாசறை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதி வடக்கு ஒன்றிய அதிமுக, காஞ்சிக்கோவில் பேரூராட்சி பகுதியில் தேர்தல் நன்றி அறிவிப்பு கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட கிழக்கு மாவட்டச் செயலாளர் மற்றும் பவானி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கருப்பண்ணன், வருகிற பெருந்துறை தொகுதி இடைத்தேர்தலில், நிர்வாகிகள் ஒன்றிணைந்து, தீவிரமாக தேர்தல் பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டார். நிகழ்வில் முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டார்.

### ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில்

## வருகின்ற 19 ந் தேதி தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்தொழில் நெறிவழிகாட்டும் மையத்தில் ஒவ்வொரு மாதமும் மூன்றாம் வெள்ளிக்கிழமை அன்று தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு தனியார்துறை வேலை அளிப்பவர்கள் கலந்து கொண்டு தங்களுக்குத் தேவையான எழுதப்படிக்க தெரிந்த நபர்கள் முதல் பட்டப்படிப்பு படித்த நபர்கள் வரை மற்றும் செவிலியர்கள், டெய்லர்கள், கணினி இயக்குபவர்கள், தட்டச்சர்கள், ஓட்டுநர்கள் போன்ற பணிகளுக்கு தகுதியுள்ள நபர்களை தேர்வு செய்து தனியார்துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டு வருகின்றனர். இதன் மூலம் மாதந்தோறும் 100 க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். மேலும், திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களும் கலந்துகொண்டு திறன் பயிற்சிக்கு தேவையான நபர்களை தேர்வு செய்து பயிற்சி அளித்து வருகின்றனர். அதன் படி இம்மாதம் 19.06.2026 வெள்ளிக்கிழமை அன்று சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்புமுகாம் காலை 10.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெறவுள்ளது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் வாயிலாக நடத்தப்படும் இவ்வேலைவாய்ப்பு முகாம், வேலைநாடுர்கள் மற்றும் வேலை அளிப்பவர்களுக்கு முற்றிலும் இலவசமாக செயல்படுத்தப்படுகிறது. எனவே, ஈரோடு மாவட்டத்தில் தனியார்துறையில் பணிபுரிய ஆர்வமாக உள்ள அனைவரும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறும், இம்முகாமின் வாயிலாக தனியார்துறையில் பணியமர்த்தம் செய்யப்படும் தேர்ந்தெடுக்கப்பட்டு வேலைநாடுநர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவுஎண் இரத்து செய்யபடமாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தினை நேரிலோ அல்லது தொலைபேசி எண் 8675412356, 9499055942, மின்னஞ்சல் முகவரி erodemegajobfair@gmail.com, mdecgc_erode InstagramPage வாயிலாகவும் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

### ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்நேற்று(15.06.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி நாள் கூட்டத்தில் உதவித்தொகை, மகளிர் உரிமைத்தொகை, முதியோர் உதவித்தொகை, வேலைவாய்ப்பு, கல்விக்கடன், தொழில் கடன்,

குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு, இலவச வீட்டுமனை பட்டா, தனிப்பட்டா மாறுதல், மின்னணு குடும்ப அட்டை, மின் இணைப்பு, தெரு விளக்கு, ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 275 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறுகோரிக்கைமனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

நேற்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தொழிலாளர் நலத்துறையின் சார்பில், கட்டுமானப்பணியிட விபத்தில் மரணமடைந்த 2தொழிலாளர்களின் குடும்பங்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.13,0,0,00/-மதிப்பிலான நிவாரண நிதியுதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து, பெருந்துறை வட்டாரம், சிங்காநல்லூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் சமையலராக பணியாற்றி 25.07.2024 அன்று பணியிடைக் காலமான தனலட்சுமி அவர்களின் வாரிசுதாரரான மகள் டி.கவிதா என்பவருக்கு நல்லாம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் செயல்பட்டு வரும் சத்துணவு மையத்தில் அமைப்பாளராக பணிபுரிய ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார், மாவட்ட பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜாகீர் உசேன், தொழிலாளர் நல உதவி ஆணையர்ஜெயலட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) உமா உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில்

## பல வண்ண புத்தகப் பைகள் வழங்கிய தமிழக அரசு – மாணவர்கள் உற்சாக வரவேற்பு



தமிழக அரசின் விலையில்லா கல்வி நலத் திட்டங்களின் ஒரு பகுதியாக, சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு பல வண்ணங்களிலான புத்தகப் பைகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

பள்ளி தலைமை ஆசிரியர்லெ.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்,பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்களான சாந்தி, டெய்சி, கலைமணி மற்றும் வெள்ளையம்மாள் ஆகியோர் கலந்து கொண்டு அனைத்து மாணவர்களுக்கும் புத்தகப் பைகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் ஸ்ரீதர் மற்றும் முத்துலெட்சுமி ஆகியோர் செய்திருந்தனர். மேலும், மாணவர்களிடம் திருக்குறள் எழுதச் செய்து, கல்வி மற்றும் ஒழுக்க நெறிகளின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

புதிய வடிவமைப்பில் பல வண்ணங்களில் வழங்கப்பட்ட புத்தகப் பைகளை பெற்ற மாணவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். தமிழக அரசின் கல்வி நலத் திட்டங்கள் மாணவர்களின் கல்விஆர்வத்தைமேலும் ஊக்குவிப்பதாக பெற்றோர்களும் ஆசிரியர்களும் பாராட்டு தெரிவித்தனர்.

## தமிழகத்தில் எங்கே இருக்கிறது பெண்கள் பாதுகாப்பு? எங்கே போனது சிங்கப்பெண் அதிரடிப் படை? எடப்பாடி பழனிசாமி கேள்வி



சென்னை: 'எங்கே போனது சிங்கப்பெண் அதிரடிப் படை?. உங்களுடைய 6 மாத ட்ரையல் பீரியட் முடியும் வரை எத்தனை பெண்கள், சிறுமிகள் பாதுகாப்பை இழந்து, உயிரை இழக்க வேண்டும்?' என கும்மிடிபூண்டி3வயதுகுழந்தை பாலியல் வன்கொடுமை சம்பவத்துக்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "திருவள்ளூர் மாவட்டம் கும்மிடி ப்பூண்டி அருகே 3 வயது குழந்தை கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி, முட்புதரில் வீசப்பட்டு கொலை செய்யப்பட்டதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

தமிழகத்தில் எங்கே இருக்கிறது பெண்கள் பாதுகாப்பு?என்ன தான் செய்கிறது காவல்துறை? எங்கே போனது சிங்கப் பெண் அதிரடிப் படை?. இதுபோன்று இன்னும் எத்தனை பெண்கள், சிறுமிகள் உங்களுடைய 6 மாத ட்ரையல் பீரியடு (Trial Period) முடியும் வரை பாதுகாப்பை இழந்து, உயிரை இழக்க வேண்டும்?. "அதிகாரிகளை நியமித்து விட்டேன். இனிமேல் எல்லாம் மாறிவிடும்" என்று டயலாக் பேசிய முதல்வரே... இதுதான் அந்த மாற்றமா?

குழந்தை பாலியல் வன்கொடுமை-கொலை வழக்கில் தொடர்புள்ள குற்றவாளிகள் அனைவரையும் உடனடியாக கைது செய்து கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இனியாவது ஷோ காட்டும் அரசியலை நிறுத்திவிட்டு, தீவிரத் தன்மை புரிந்து சட்டம் ஒழுங்கைக் காக்கும் செயல்களில் ஈடுபடுமாறு இந்த பொய்க்கால் குதிரை அரசை வலியுறுத்துகிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

### மதுராந்தகம் அருகே த.வெ.க. நிர்வாகிகள்

## அரசு பள்ளி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தமிழக முதல்வர் உருவம் பதித்த படம் வழங்கினர்



செங்கல்பட்டு மாவட்டம்தவெகபொதுச்செயலாளர் அமைச்சர் திரு புஸ்ஸி ஆனந்த் அவர்களின் ஆணைக்கிணங்க மதுராந்தகம் அடுத்த இரும்பேடு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மேல்நிலைப்பள்ளி நடுநிலைப்பள்ளியில் தமிழக வெற்றி கழக மகளிர் மாவட்ட நிர்வாகி இரும்பேடு சுமதி சாமிகண்ணு தலைமையில் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பெருமக்கள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு ஆடை போர்த்தி இனிப்பு வழங்கி தமிழக வெற்றி கழக தலைவரும் தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் உருவம் பதித்தபடத்தினைவழங்கினார் இதில் செவிலியர்கள் பள்ளி மாணவியர்கள் என கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

## போலியான ஆவணங்கள் தயார் செய்து இடம் ஆக்கிரமிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு



போலியான ஆவணங்கள் தயார் செய்து, சிறுபாடு சவேரியார் ஆலயத்திற்கு பாத்தியப்பட்ட இடத்தை ஆக்கிரமித்த கணவர் வழக்கறிஞர், மனைவி நீதிமன்ற அரசு ஊழியர் என்ற உண்மையை மறைத்த இருவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு

இது தொடர்பாக ஊர் தலைவர் மற்றும் ஊர் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் அளித்துள்ள மனுவில் தெரிவிக்கையில்:

எங்கள் வீடுகள் சவேரியார் ஆலயத்திற்கு சொந்தமானதாகும். மேலும் சவேரியார் கிறிஸ்தவ ஆலயத்திற்கு பாத்தியப்பட்ட இடங்களில் ஆலய நிர்வாக அனுமதி பெற்று, அதன் ஒப்புதலுடன் ஆலயத்திற்கும், திருவிழா சமயங்களில் ஆலய தேர் செல்வதற்கும் எவ்வித இடையூறும் இன்றி வீடுகள் கட்டுவது என்பது தீர்மானம் ஆகும். அதன் அடிப்படையில் தான் 30 வருடங்களுக்கும் மேலாக ஷை பகுதியில் வசித்து வருகிறோம். இதனிடையே சிலுவைப்பட்டி பகுதியில் சொந்தமாக வீடு கட்டி குடியிருந்து வரும் வக்கீல் ஞானதிரவியம் மற்றும் அரசு ஊழியர் மரியா ஆகியோர் மேற்படி ஆலயத்திற்கு முன்பாக ஆலய இடத்தில் போலி ஆவணங்கள் தயார் செய்தும், வழக்கறிஞர் மற்றும் அரசு ஊழியர் என்பதை மறைத்தும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் என்பதில் 2019-2020 வருடத்திய W33-T50D-PR150-5/103 என்பதின் படியாக அரசை ஏமாற்றி வீடு கட்டி தொடர்ந்து ஊர் பொதுமக்களுக்கும், ஆலயத்திற்கும், ஆலய சொத்துக்கும் இடையூறு செய்து வருகிறார்கள். மேலும் ஞான திரவியம் மற்றும் அவரது மனைவி மரியா ஆகிய இருவரும் வழக்கறிஞர் மற்றும் அரசு ஊழியர் என்பதை மறைத்தும், சொந்தமாக பல வீடுகள் இருப்பதை மறைத்தும் ஆலய இடத்தில் போலி ஆவணங்கள் தயார் செய்து தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் வீடு கட்டியுள்ளார். எனவே மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஊர் தலைவர் சிலுவை பாலன் கூறினார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (15.06.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெருந்துறை வட்டாரம், சிங்காநல்லூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் சமையலராக பணியாற்றி 25.07.2024 அன்று பணியிடைக் காலமான தனலட்சுமி வாரிசுதாரரான மகள் டி.கவிதா என்பவருக்கு நல்லாம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் செயல்பட்டு வரும் சத்துணவு மையத்தில் அமைப்பாளர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணையினை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (15.06.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வு உறுதிமொழியினை பணியாளர்கள் உட்பட அனைவரும் ஏற்றுக்கொண்டனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# கோவையில் துவங்கியது பிரேமம் இன் கல்யாண வைபோகம் திருமண சிறப்பு கண்காட்சி



இந்திய திருமணங்களில் பாரம்பரிய செழுமை, இந்திய நெசவு துணிகளின் காலத்தால் அழியாத அழகு மற்றும் நவீன பெண்மையின் முக்கியத்துவத்தை முன்னிருத்தும் வகையில், தொழில்முனைவோரான ஸ்வர்ணமுகி ரகுபதி நடத்தும், பிரேமம் சில்க்ஸ் நிறுவனத்தின் சிறப்புதிருமணதொகுப்பு கண்காட்சியான பிரேமம்-இன் கல்யாண வைபோகம் எனும் தலைப்பில் ஜுன் 15, மற்றும் 16 ஆகிய இரு தேதிகளில் நடைபெற உள்ளது. இந்த கண்காட்சியின் துவக்கவிழா கோவை பாப்பநாயக்கன் பாளையத்தில் உள்ள ரெசிடென்சி டவர் உணவகத்தில் நடைபெற்றது இதனை பிரிக்கால் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் சிறுதுளி அறக்கட்டளையின் நிர்வாகஅறங்காவலர் வனிதா மோகன், மற்றும் மிஸ் யுனிவர்ஸ் இந்தியா 2021 போட்டியில் இரண்டாம் இடம் பிடித்ததரணி கலிங்கராயரும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டியும், குத்துவிளக்கேற்றி வைத்தும் துவக்கிவைத்தனர். தொடர்ந்து இது குறித்து வனிதா மோகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது..

பெண்களின் அழகு, ஆற்றல் தணித்துவத்தை கொண்டாடும் வகையில் பிரேமம் சில்க்ஸ் கல்யாண வைபோகம் கண்காட்சி நடத்த பட்டு வருகிறது. இங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட திருமண சேலைகள் கண்காட்சி படுத்த பட்டு விற்பனைக்கு வைக்க பட்டுள்ளது. இங்கு பந்தினி பைதானி சேலைகள், ஆர்கன்சா எல்லைகளுடன் நெய்யப்பட்ட பனாரஸ் பட்டு சேலைபள், உள்ளிட்ட பல்வேறு சேலைகள் காட்சிபடுத்த பட்டுள்ளது. இவை அனைத்தும் இன்றைய தலைமுறையினர் விரும்பும் வகையில் புதுமையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றார். தொடர்ந்து பிரேமம் சில்க்ஸ் நிறுவனர் ஸ்வர்ணமுகி ரகுபதி கூறுகையில்..

பிரேமம் சில்க்ஸ் என்பது ஒரு வணிக நிறுவனம் மட்டுமில்லாமல், இது ஒரு உணர்வாக பார்க்க படுகிறது, பெண்ணின் உள்ளார்ந்த தெய்வீகத்தை கொண்டாடும் முயற்சி யாக உருவாக்க பட்டுள்ளது. பாரம்பரியம் கைவினைத்திறன் மற்றும் உணர்வுகளை தாங்கிய ஒவ்வொரு நெசவு துணியும், பெண்களுக்கு அழகு தன்னம்பிக்கையுடன் கூடிய உணர்வை அளிக்கும் என்பதில் ஐயமில்லை என்று தெரிவித்தார்.

### கோவை புலியகுளம் பகுதியில்

# டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் இரத்ததான இயக்கம் சார்பாக அமைப்பின் பெயர் பலகைக்கு மாலை அணிவித்து மரியாதை

கோவை புலியகுளம் பகுதியில் கடந்த 10 ஆண்டுகளாக, அப்பகுதியை சேர்ந்த இளைஞர்கள், இதத்ததானத்தை முன்னிருத்தி டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் இரத்ததான இயக்கம் என்ற ஒரு அமைப்பை உருவாக்கி, அவசர தேவைகளுக்கான இரத்த தானங்கள், இரத்த தானம் விழிப்பு ணர்வுகளை பொதுமக்களுக்கு ஏற்படுத்தி வருகின்றனர் இந்த நிலையில் ஜூன் 14ம் தேதியான இன்று உலக குறுதி கொடையாளர்கள் தினத்தை முன்னிட்டு, அமைப்பின் பெயர் பலகைக்குமாலைஅணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் இரத்த தான இயக்கத்தை சார்ந்த நிர்வாகி, கலைவாணன் கூறியதாவது..



உலக இரத்த தான தினத்தை முன்னிட்டு, ஒரு நொடித் துணிவு என்பது ஒரு உயிரின் வாழ்க்கை, நம் உடலில் ஓடும் இரத்தம் வெறும் திரவமல்ல, அது மற்றொருவருக்குக் கிடைக்கும் மறுவாழ்வு இதனை அனைவரும் தெரிந்து கொண்டு விழிப்புணர்வு அடைய வேண்டும் என்றார். ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 14-ஆம் தேதி, உலக இரத்த தான தினமாக கொண்டாடப்படுகிறது, கைமாறு கருதாமல், தன் இரத்தத்தைக் கொடுத்து பல உயிர்களைக் காக்கும் உன்னதக் கொடையாளர்களைப் போற்றும் நாள் இது. இரத்தத்திற்குப் மாற்றாக உலகில் எந்த ஒரு தொழிற்சாலையிலும் செயற்கை இரத்தத்தைத் தயாரிக்க முடியாது மனித இரத்தத்திற்கு மனித இரத்தம் மட்டுமே மாற்று என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

இரத்த தானம் செய்வது வாங்குபவருக்கு மட்டுமல்ல, கொடுப்பவருக்கும் நல்லது, இது உடலில் புதிய இரத்த அணுக்கள் உருவாக்குவதுடன், மாரடைப்பு அபாயத்தைக்குறைக்கிறது மற்றும் உடலை சுறுசுறுப்பாக வைத்திருக்க உதவுகிறது என்பதை இன்றைய இளைஞர்கள் புரிந்து கொள்ள முன்வர வேண்டும் என்றார். இந்த நிகழ்ச்சியில் டாக்டர் ஏபிஜே அப்துல்கலாம் இரத்த தான இயக்க நிர்வாகிகளான ராஜேஷ், வழக்கறிஞர் சீனிவாசன், ராஜ் தீபன், விஜய், விஷ்ணு, சூர்யா, ஸ்ரீராம், சுனில், சுபாஷ் உள்ளிட்டபலர்கலந்துகொண்டனர்.




தமிழக அன்பின் கரங்கள் அறக்கட்டளை அமைப்பின் சார்பாக ஈரோடு கஸ்பாபேட்டை அருகில் இருக்கும் கருணாலயம் குழந்தைகள் ஆசிரமத்தில் 40 மாணவச் செல்வங்களுக்கு கல்வி நலத்திட்ட உதவிகள் மற்றும் மதிய உணவுகள் வழங்கினார்கள். நிகழ்ச்சியில் அமைப்பின் நிறுவனத் தலைவர் டாக்டர் ரமேஷ் மற்றும் ஆசிரம நிர்வாகிகள் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இறுதியில் இதற்கு உதவியே அனைத்து நல்உள்ளங்களுக்கும் நிறுவனத் தலைவர் டாக்டர் நா.ரமேஷ் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

# 6.2 magnitude earthquake strikes southern Philippines

*The quake hit off the coast of Mindanao island at 5:18 pm (0918 GMT) at a depth of 112 kilometres (69.5 miles), the USGS reported.*

*A 6.2-magnitude earthquake struck the southern Philippine island of Mindanao on Monday, according to the United States Geological Survey, AFP reported.*



*The quake hit off the coast of Mindanao island at 5:18 pm (0918 GMT) at a depth of 112 kilometres (69.5 miles), according to USGS.*

*Philippine state seismology agency Phivolcs director Teresito Bacolcol told DZMM radio that Monday's quake originated along the Philippine Trench and was not linked to the magnitude 7.8 earthquake that hit Mindanao on June 8, with the epicentres located more than 250 kilometres apart, Reuters reported.*

*65 killed, over 200 injured in June 8 quake*

*At least 65 people were killed and more than 200 were injured on June 8 after a 7.8-magnitude earthquake struck the southern city of General Santos in the Philippines, according to Reuters.*

*A tsunami warning was also issued along parts of the coasts of Indonesia, the Philippines, Palau, Taiwan and Papua New Guinea, the Pacific Tsunami Warning Center said in a separate alert.*

*Visuals on social media platform X purportedly showed buildings collapsing during the earthquake. One viral clip appeared to show a shelter collapsing at a school ground where children had assembled. The video later showed a teacher helping students practise earthquake safety measures before the structure gave way.*

*In another video shared on social media, residents were seen running for safety as a building collapsed.*

*Philippine President Ferdinand Marcos Jr. had suspended school classes in affected areas of Mindanao and called on residents in coastal areas to evacuate immediately, AFP reported.*

*"Move to higher ground now. Do not wait," he said. "Your life is more important than anything left behind."*

*The Philippines and neighbouring countries frequently experience earthquakes due to their location along the Pacific "Ring of Fire" – a zone of intense seismic and volcanic activity that stretches from Japan through Southeast Asia and across the Pacific basin.*



### கோவை மசக்காளிபாளையம் பகுதியில் உள்ள தனியார் திருமண அரங்கில்

# அமைச்சர் சம்பத்குமார் முன்னிலையில் த.வெ.க. இணைந்த இளைஞர்கள்

## அடிப்படை உறுப்பினர் அட்டைகளை பெற்றனர்

கோவை மசக்காளிபாளையம்பகுதியில் உள்ள தனியார்திருமணஅரங்கில்,

தமிழக வெற்றி கழக கோவை கிழக்கு மாவட்டம் சார்பில், தமிழக வெற்றி கழக நிர்வாகிகளான பாலமுரளி, கிருஷ்ணன் மற்றும் அபய்கிருஷ்ணன், தலைமையில்

மாபெரும் மாற்றுக் கட்சியை சேர்ந்தவர்கள் 500க்கும் மேற்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சர் சம்பத்குமார் முன்னிலையில் தமிழக வெற்றிக்கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் கோவைகிழக்கு மாவட்ட செயலாளர் யுவராஜ், சிங்காநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் கிரி பிரசாத், பகுதி செயலாளர், சரத்குமார்

தவெக நிர்வாகிகள் வைரமணி, போனஸ் பாபு, உமா மகேஷ்வரி, மணிகண்டன், அமிர்தலிங்கம், இந்திராமணி, ஜார்சல் பீட்டர், நாகராஜ், சுரேஷ் பாபு, புவனேஷ்ராஜ் மற்றும் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் முன்னதாக விழாவில் கலந்து கொண்ட தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமாருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்த்து மாற்று கட்சியை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு தமிழக வெற்றிக்கழக அடிப்படை உறுப்பினர் அட்டைகளை அமைச்சர் வழங்கினார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சம்பத்குமார் கூறியதாவது..

அனைத்து கட்சியினரும் நமது தவெக கட்சியில் இணைந்துள்ளனர் அவர்களுடன் இணைந்து மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்றார். தொடர்ந்து முன்னாள் முதல்வர் மு.க ஸ்டாலின் தவெக கட்சியை தீர்ந்து போன கட்சி, இங்கு இதற்க்கு மேல் சரக்கு இல்லை என்று கூறி வருகின்றார் என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு.. அமைச்சர் கூறியதாவது.. தீர்ந்து போன கட்சி யார் என்பது மக்களுக்கு தெரியும், 2024 கட்சி ஆரம்பிக்க பட்ட நாளில் இருந்து பல்வேறு விமர்சனங்களை சந்தித்து தான் வந்து கொண்டு இருக்கின்றோம்.

ஆனால் மக்களுக்கு சேவை யாற்றவே நாங்கள் வந்துள்ளோம் இது மாதிரியான விஷயங்களை தவெக ஒருபோதும் காதில் போட்டு கொள்ளாது என்றார்.

### ஈரோட்டில் உலக இரத்த கொடையாளர் தின விழா

# சிறந்த இரத்த கொடையாளர்கள் மற்றும் இரத்த தான ஒருங்கிணைப்பாளர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன



ஈரோடு மாவட்ட இரத்த தான ஒருங்கிணைப்பாளர்கள் சங்கம் சார்பில் உலக இரத்த கொடையாளர் தின விழா மற்றும் சிறந்த இரத்த கொடையாளர்கள், இரத்த தான ஒருங்கிணைப்பாளர்களுக்கான விருது வழங்கும் விழா ஈரோடு பேருந்து நிலையம் அருகில் உள்ள தனியார் ஹாலில் நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக நிறுவனங்களின் சங்க (NDSO ) நிறுவனரும் நிர்வாக இயக்குனருமான ஜே.பிரபாகர், மணியன் மெடிக்கல் சென்டர் மருத்துவர் எஸ்.செந்தில் குமரன், ஈரோடு அரசு மருத்துவக்கல்லூரி இரத்த வங்கி துணை பேராசிரியரும் மருத்துவருமான ஜி.சரண்யா, திமுக மாநில மாணவரணி செயலாளர் ஈரோடு வீரமணி, ஈரோடு சுப்ரீம் அரிமா இரத்த வங்கி செயலாளர் அரிமா. குமாரசாமி, தமிழ்நாடு தன்னார்வ இரத்த வங்கி நிர்வாகி கே.ஆர்.வெங்கடாசலம், அந்தியூர் அரசு மருத்துவமனை மருத்துவர் எஸ்.கவிதா, அரிமா இரத்த வங்கி சரவணன், ஈரோடு தலைமை அரசு மருத்துவமனை இரத்த வங்கி மருத்துவர் சசிகலா மற்றும் கோபி அரசு மருத்துவமனை மருத்துவர் ராம்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறந்த இரத்த கொடையாளர்களுக்கும் இரத்த தான ஒருங்கிணைப்பாளர்களுக்கும் விருதுகளை வழங்கி சிறப்பித்தனர். முன்னதாக ஈரோடு மாவட்ட இரத்த தான ஒருங்கிணைப்பாளர்கள் சங்கத் தலைவர் கார்த்திகேயன் வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து ஈரோடு கிழக்கு அரிமா சங்க அரிமா. வி.எம். இளங்கோ வாழ்த்துரையாற்றினார். விழாவின் நிறைவாக ஈரோடு மாவட்ட இரத்த தான ஒருங்கிணைப்பாளர்கள் சங்கச் செயலாளர் ர. கவியரசு நன்றியுரையாற்றினார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.